# அன்பிற்கினிய ஆசிரியத் தோழர்களே!
# மாணவச் செல்வங்களே!

## www.waytosuccess .org
## இணைய தளத்தின்
## இனிய நல்வாழ்துகள்!

பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வு
தமிழ் இரண்டாம் தாள்
பிரிவு-I பகுதி 3 இல்
வினா எண்கள் 11 முதல் 20 வரையிலான
மொழிப்பயிற்சிப் பகுதி
இங்கு தரப்பட்டுள்ளது
பயன்படுத்திப் பயன்பெறுக

பிரிவு- I **சொற்றொடர் வகைகள்** பகுதி - 3

## அ) செய்தி, வினா, கட்டளை, உணர்ச்சித் தொடர்கள்.

**பொருள் உணர்த்தும் வகையால் தொடர் நான்கு வகைப்படும். அவை 1. செய்தித்தொடர், 2. வினாத்தொடர், 3. உணர்ச்சித் தொடர், 4. கட்டளைத் தொடர் ஆகியன.**

1. **செய்தித்தொடர் :** ஒரு கருத்தினைச் செய்தியாகத் தெரிவிக்கும் தொடர்கள் செய்தித் தொடர்கள் எனப்படும்.

**(எ-டு)** 1. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

2. பாரதிதாசன் பரட்சிக்கவிஞர் என அழைக்கபப்படுகிறார்.

**குறிப்பு : செய்தித்தொடர்களின் முடிவில் முற்றுப்புள்ளி இட்டு எழுத வேண்டும்.**

2. **வினாத்தொடர் :** வினாப்பொருளைத் தரும் தொடர்கள் வினாத்தொடர்கள் எனப்படும். ஏன்?, எப்படி?, எங்கு? எப்போது?, எவ்வாறு? எத்தனை? எவ்வளவு? முதலிய வினாச்சொற்கள் இடம்பெறும். **வினாத்தொடர்களின் முடிவில் வினாக்குறி இட்டு எழுத வேண்டும்.**

**(எ-டு)** 1. திருக்குறளை இயற்றியவர் யார்?

2. முருகன் எங்கு சென்றான்?

3. நம்நாடு எப்போது விடுதலை பெற்றது?

**குறிப்பு : வினாத்தொடர்களின் முடிவில் வினாக்குறி இட்டு எழுத வேண்டும்.**

3. **உணர்ச்சித்தொடர் :** மகிழ்ச்சி, துன்பம், வியப்பு முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தொடர்கள் உணர்ச்சித் தொடர்கள் எனப்படும்.

**(எ-டு)** 1. அடேயப்பா! எவ்வளவு பெரிய மலை!

2. ஐயகோ! அன்னை தெரசா மறைந்து விட்டாரே!

3. என்னே! குற்றால அருவியின் அழகு!

4. ஆகா! இணையதளத்தால் எத்துணை பயன்கள்!

**குறிப்பு : உணாச்சித்தொடர்களின் முடிவில் உணர்ச்சிக்குறி இட்டு எழுத வேண்டும்.**

4. **கட்டளைத்தொடர் :** ஏவல் பொருளைத் தரும் தொடர்கள் கட்டளைத் தொடர்கள் எனப்படும்.

**(எ-டு)** 1. காலையில் எழு.

2. தினமும் படி.

3. பாடலைப் பாடு.

4. பெரியாரைப் போற்று.

## ஆ) செய்வினைத்தொடர், செயப்பாட்டு வினைத் தொடர்

1. **செய்வினைத் தொடர் :** எழுவாய் செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் **செய்வினைத்தொடர்** எனப்படும். செயப்படு பொருளோடு ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பட்டும் மறைந்தும் வரும்.

**(எ-டு)** 1. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். (வேற்றுமை உருபு ஐ வெளிப்பட்டு வந்தது.)

2. கண்ணன் குழல் ஊதினான். (வேற்றுமை உருபு ஐ மறைந்து வந்தது.)

எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற வரிசையில் தொடர் அமையும்.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| திருவள்ளுவர் | திருக்குறள் | இயற்றினார் |
| கண்ணன் | குழல் | ஊதினான் |

2. **செயப்பாட்டு வினைத்தொடர் :** செயப்படுபொருள், எழுவாய், பயனிலை என்னும் வரிசையில் சொற்கள் அமையும். தொடர் **செயப்பாட்டு வினைத்தொடர்** எனப்படும். எழுவாய் **'ஆல்'** என்னும் மூன்றாம் வேற்றுமை உருபினைப் பெற்று வரும். பயனிலையோடு **படு, பட்டது, பெறு, பெற்றது** போன்ற துணைவினைகளுள் ஒன்று இடம்பெறும்.

(எ-டு) 1. **திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.**

2. **குழல் கண்ணனால் ஊதப்பட்டது.**

செயப்படுபொருள், எழுவாய், பயனிலை என்ற வரிசையில் தொடர் அமையும்.

| **செயப்படுபொருள்** | - | **எழுவாய்** | - | **பயனிலை** |
|---|---|---|---|---|
| திருக்குறள் | - | திருவள்ளுவர் (ஆல்) | - | இயற்றப்பட்டது |
| குழல் | - | கண்ணன் (ஆல்) | - | ஊதப்பட்டது |

## இ) தன்வினைத் தொடர், பிறவினைத் தொடர்

1. **தன்வினைத் தொடர் :** எழுவாய் தானே செய்யும் தொழிலை உணர்த்துவது **தன்வினைத் தொடர்** எனப்படும்.

(எ-டு) 1. வளவன் திருக்குறள் **கற்றான்.**

2. அமுதன் சிலம்பம் **பயில்கிறான்.**

2. **பிறவினைத் தொடர் :** எழுவாய் பிறரைக் கொண்டு ஒரு செயலைச் செய்விப்பது. **பிறவினைத் தொடர்** எனப்படும்.

(எ-டு) 1. வளவன் திருக்குறள் **கற்பித்தான்.**

2. அமுதன் சிலம்பம் **பயிற்றுகிறான். (பயிற்றுவிக்கிறான்)**

## ஈ) நேர் கூற்றுத் தொடர், அயற் கூற்றுத் தொடர்

1. **நேர்கூற்றுத் தொடர் :** ஒருவர் பேசுவதை, அவர் பேசிய படியே கூறுவது **நேர் கூற்றுத் தொடர்** எனப்படும்.

நேர்கூற்றுத் தொடரில் சொல்பவரின் கூற்று இரட்டைமேற்கோள் குறிக்குள் இருக்கும்.

(எ-டு) 1. அழகன், **"நான் நாளை மதுரை செல்கிறேன்"** என்றான்.

2. **"நான் புத்தகம் கொண்டு வருகிறேன்"** என்று மலர்விழி தோழியிடம் கூறினாள்.

2. **அயற்கூற்றுத் தொடர் :** ஒருவர் கூறியதை அப்படியே கூறாமல் மற்றவர் அதைத் தனது கருத்தாகக் கூறுவது அயற்கூற்றுத்தொடர் எனப்படும். அயற்கூற்றில் காற்புள்ளி, இரட்டை மேற்கோள்குறி போன்றவை இடம்பெறாது. தன்மை, முன்னிலைப் பெயர்கள் படர்க்கையில் மாறி அமையும். அண்மைச்சுட்டுகள் சேய்மைச் சுட்டுகளாக மாறும். என்று, படி, ஆக முதலிய இணைப்புச் சொற்கள் வரும்.

(எ-டு) 1. அழகன் தான் மறுநாள் மதுரை செல்வதாகக் கூறினான்.

2. மலர்விழி தோழியிடம் தான் புத்தகம் கொண்டு வருவதாகக் கூறினாள்.

## உ) உடன்பாட்டுத் தொடர், எதிர்மறைத் தொடர், பொருள்மாறா எதிர்மறைத்தொடர்

1. **உடன்பாட்டுத் தொடர் :** செயல் நிகழ்வதைக் குறிக்கும்தொடர் **உடன்பாட்டுத் தொடர்** எனப்படும்.

(எ-டு) 1. அன்பரசு பாடம் **படித்தான்.**

2. அமுதா கட்டுரை **எழுதினாள்.**

3. நான் மதுரை **செல்வேன்.**

2. **எதிர்மறைத் தொடர் :** செயல் நிகழாமையைக் குறிக்கும்தொடர் **எதிர்மறைத் தொடர்** எனப்படும்.

எ-டு) 1. அன்பரசு பாடம் **படித்திலன்.**

2. அமுதா கட்டுரை **எழுதிலள்.**

3. நான் மதுரை **செல்லேன்.**

2. **பொருள்மாறா எதிர்மறைத் தொடர் :** இரண்டு எதிர்மறைச்சொற்கள் வந்து உடன்பாட்டுப் பொருளைத் தருவது **பொருள்மாறா எதிர்மறைத்தொடர்** எனப்படும்.

எ-டு) 1. அன்பரசு பாடம் **படிக்காமல் இரான்.** இத்தொடரின் பொருள் அன்பரசு பாடம் **படித்தான்.** என்பதே ஆகும். (**படிக்காமல், இரான்** என்பன இரு எதிர்மறைகள்)

2. அமுதா கட்டுரை **எழுதாமல் இராள்.** இத்தொடரின் பொருள் அமுதா கட்டுரை **எழுதினாள்** என்பதே ஆகும். (**எழுதாமல், இராள்** என்பன இரு எதிர்மறைகள்)

3. நான் மதுரை **செல்லாமல் இரேன்.** இத்தொடரின் பொருள்
நான் மதுரை **செல்வேன்** என்பதே ஆகும். (**செல்லாமல், இரேன்** என்பன இரு எதிர்மறைகள்)

## ஊ) தனிநிலைத் தொடர், தொடர்நிலைத் தொடர், கலவைத் தொடர்

**1. தனிநிலைத் தொடர் :** ஒரு எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது **தனிநிலைத் தொடர்** எனப்படும்.

(எ-டு) 1. **அன்பரசு** பாடம் **படித்தான்.** (அன்பரசு - எழுவாய், படித்தான் - பயனிலை)
இத்தொடர் ஒரு எழுவாய், **ஒரு பயனிலையைக்** கொண்டு முடிந்தது

2. **மா, பலா, வாழை** ஆகியன **முக்கனிகள். (**மா, பலா, வாழை - எழுவாய்கள், முக்கனிகள் - பயனிலை)
இத்தொடர் பல எழுவாய்களையும் **ஒரு பயனிலையையும்** கொண்டு முடிந்தது)

**2. தொடர்நிலைத் தொடர் :** ஒரு எழுவாய், பல பயனிலைகளைக் கொண்டு முடிவது **தொடர்நிலைத் தொடர்** எனப்படும். இத்தொடர்கள் அதனால், ஆகயால், ஏனெனில் முதலிய இணைப்புச் சொற்களைப் பெற்று வரும்.

(எ-டு) 1. **முகிலன்** முயன்று **படித்தான்; அதனால்** வாழ்வில் **முன்னேறினான்.**
(முகிலன் - எழுவாய், படித்தான், முன்னேறினான் - பயனிலைகள்)

2. **அரசன்** புலவரைக் **கண்டான்**; உளம் **மகிழ்ந்தான்**; பரிசுகள் **வழங்கினான்**.
(அரசன் - எழுவாய், கண்டான், மகிழ்ந்தான், வழங்கினான் - பயனிலைகள்)
மேற்கண்ட இரு தொடர்ளும் ஒரு எழுவாய், பல பயனிலையைக் கொண்டு முடிந்தன.

**3. கலவைத் தொடர்:** ஒரு தனிநிலைத் தொடர், பல துணைநிலைத் தொடர்களைக் கொண்டு முடிவது **கலவைத் தொடர்** எனப்படும்.

(எ-டு) 1. **நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை.**
(நேற்று புயல் வீசியதால் - துணைநிலைத் தொடர்; பள்ளிக்கு விடுமுறை - முதன்மைத்தொடர்)

2. **அரசன் புலவரைக் கண்டதால், உளம் மகிழ்ந்து பரிசுகள் வழங்கினான்.**
அரசன் புலவரைக் கண்டதால், உளம் மகிழ்ந்து - துணைநிலைத் தொடர்கள்
பரிசுகள் வழங்கினான் - முதன்மைத்தொடர்

**வழிகாட்டிக் குறிப்பு :** முதன்மைத்தொடர் தனியாக நின்று முழுமையான பொருள் தரும். துணைநிலைத்தொடர் தனியாக நின்று முழுமையான பொருள் தராது.

## தொடர்களை மாற்றுதல்

**1. பின்வரும் கட்டளைத் தொடர்களைச் செய்தித் தொடர்களாக மாற்றுக.**

| | கட்டளைத் தொடர் | செய்தித் தொடர் |
|---|---|---|
| 1 | நாள்தோறும் உடற்பயிற்சி செய். | நாள்தோறும் உடற்பயிற்சி செய்ய வேண்டும் |
| 2 | இளமையில் கல் | இளமையில் கற்க வேண்டும் |
| 3 | ஒவ்வொரு நாளும் செய்தித்தாளைப் படி. | ஒவ்வொரு நாளும் செய்தித்தாளைப் படிக்க வேண்டும். |
| 4 | காலையில் எழுவதைப் பழக்கமாக்கிக் கொள். | காலையில் எழுவதைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். |
| 5 | அனைவரும் தாய்மொழியிலேயே கற்க. | அனைவரும் தாய்மொழியிலேயே கற்க வேண்டும் |
| 6 | திருக்குறளைப் படி | திருக்குறளைப் படிக்க வேண்டும் |
| 7 | சத்தான உணவு வகைகளைச் சாப்பிடு | சத்தான உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும். |

| 2. பின்வரும் தன்வினைத் தொடர்களைப் பிறவினைத் தொடர்களாக மாற்றுக. | | |
|---|---|---|
| | **தன்வினைத் தொடர்** | **பிறவினைத் தொடர்** |
| 1 | மங்கை திருக்குறள் **பயின்றாள்.** | மங்கை திருக்குறள் **பயிற்றுவித்தாள்.** |
| 2 | பூங்கோதை பொம்மை **செய்தாள்.** | பூங்கோதை பொம்மை **செய்வித்தாள்.** |
| 3 | தாய் உணவு **உண்டாள்.** | தாய் உணவு **உண்பித்தாள். (ஊட்டினாள்)** |
| 4 | அறிவொளி திருவாசகம் **கற்றான்.** | அறிவொளி திருவாசகம் **கற்பித்தான்.** |
| 5 | கண்ணன் **ஆடினான்.** | கண்ணன் **ஆட்டுவித்தான்.** |

| 3. பின்வரும் செய்தித் தொடர்களை உணர்ச்சித் தொடர்களாக மாற்றுக. | | |
|---|---|---|
| | **செய்தித் தொடர்கள்** | **உணர்ச்சித் தொடர்கள்** |
| 1 | திருக்குற்றாலம் இயற்கை எழில் நிறைந்தது. | என்னே! திருக்குற்றாலத்தின் இயற்கை எழில்! |
| 2 | முழுநிலவு மிகவும் அழகாக இருக்கிறது | என்னே! முழுநிலவின் அழகு! |
| 3 | மாமல்லபுரச் சிற்பங்கள் மிகவும் அழகாக உள்ளன. | என்னே! மாமல்லபுரச் சிற்பங்களின் அழகு! |
| 4 | நேரு மறைந்துவிட்டார். | அந்தோ! நேரு மறைந்துவிட்டாரே! |
| 5 | என் பணப்பையை இழந்துவிட்டேன். | ஐயோ! என் பணப்பையை இழந்துவிட்டேனே! |

| 4. பின்வரும் செய்வினைத் தொடர்களை செயப்பாட்டுவினைத் தொடர்களாக மாற்றுக. | | |
|---|---|---|
| | **செய்வினைத் தொடர்** | **செயப்பாட்டுவினைத் தொடர்** |
| 1 | திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். | திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. |
| 2 | நான் பாடம் படித்தேன். | பாடம் என்னால் படிக்கப்பட்டது. |
| 3 | நாடகக்கலைஞர்கள் நாட்டுப்பற்றை வளர்த்தனர். | நாட்டுப்பற்று நாடகக்கலைஞர்களால் வளர்க்கப்பட்டது. |
| 4 | பாவை முதல் பரிசு **பெறுவாள்.** | முதல் பரிசு பாவையால் **பெறப்படும்.** |
| 5 | கண்ணன் குழல் **ஊதுகிறான்.** | குழல் கண்ணனால் **ஊதப்படுகிறது.** |
| 6 | மக்கள் மழைநீரைச் சேமித்தனர். | மழைநீர் மக்களால் சேமிக்கப்பட்டது. |
| 7 | கனிமொழி கட்டுரை எழுதினாள். | கட்டுரை கனிமொழியால் எழுதப்பட்டது. |
| 8 | **நீ** ஓவியம் வரைந்தாய். | ஓவியம் **உன்னால்** வரையப்பட்டது. |
| 9 | **நாங்கள்** பாடம் படித்தோம். | பாடம் **எங்களால்** படிக்கப்பட்டது. |

| 5. பின்வரும் உடன்பாட்டுத் தொடர்களை எதிர்மறைத் தொடர்களாக மாற்றுக. | | |
|---|---|---|
| | **உடன்பாட்டுத்தொடர்** | **எதிர்மறைத்தொடர்** |
| 1 | நாவுக்கரசி **நன்கு எழுதுவாள்.** | நாவுக்கரசி **நன்கு எழுதாள்.** |
| 2 | வயலில் ஆடுகள் **மேய்ந்தன.** | வயலில் ஆடுகள் **மேய்ந்தில.** |
| 3 | இசைக்கு **அனைத்து உயிர்களும் மயங்கும்.** | இசைக்கு **அனைத்து உயிர்களும் மயங்கா.** |
| 4 | போட்டியில் **சிலரால் வெற்றி பெற இயலும்.** | போட்டியில் **சிலரால் வெற்றி பெற இயலா.** |
| 5 | கண்ணன் பாட்டுப் **பாடினான்.** | கண்ணன் பாட்டுப் **பாடிலன்.** |
| 6 | கனிமொழி நன்கு **பேசுவாள்.** | கனிமொழி நன்கு **பேசாள்.** |
| 7 | நான் பரிசு **பெற்றேன்.** | நான் பரிசு **பெற்றிலேன்.** |

**6. பின்வரும் செத்தித்தொடர்களை வினாத்தெடர்களாக மாற்றுக.**

| | செய்தித்தொடர்கள் | வினாத்தொடர்கள் |
|---|---|---|
| 1 | நாவுக்கரசி **நன்கு** எழுதுவாள். | நாவுக்கரசி **எப்படி** எழுதுவாள்? |
| 2 | **நாடகக்கலைஞர்கள்** நாட்டுப்பற்றை வளர்த்தனர். | **எவர்** நாட்டுப்பற்றை வளர்த்தனர்? |
| 3 | **1891ஆம் ஆண்டு** அம்பேத்கர் பிறந்தார் | அம்பேத்கர் **எப்போது** பிறந்தார்? |
| 4 | **எடுத்தல், தொடுத்தல், முடித்தல்** என்பன பேச்சின் முக்கூறுகள் ஆகும். | பேச்சின் முக்கூறுகள் **யாவை?** |
| 5 | **ஒழுக்கம்** உயிரினும் ஓம்பப்படும். | **எது** உயிரினும் ஓம்பப்படும்? |
| 6 | இராமலிங்கர் **மருதூரில்** பிறந்தார். | இராமலிங்கர் **எங்கு** பிறந்தார்? |

**7. பின்வரும் நேர்கூற்றுத் தொடர்களை அயற்கூற்றுத் தொடர்களாக மாற்றுக.**

| | நேர்கூற்றுத் தொடர்கள் | அயற்கூற்றுத் தொடர்கள் |
|---|---|---|
| 1 | கண்ணன் முருகனிடம், “நான் எனது பெற்றோருடன் நேற்று கோவிலுக்குச் சென்றேன்” என்றான். | கண்ணன் முருகனிடம் தான் தனது பெற்றோருடன் முன்தினம் கோவிலுக்குச் சென்றதாகக் கூறினான். |
| 2 | மணியன், “விளையாட்டுப் போட்டியில் எனது அணி வெற்றி பெற்றது” என்றான். | விளையாட்டுப் போட்டியில் தனது அணி வெற்றி பெற்றதாக மணியன் கூறினான். |
| 3 | வளவன் நண்பனிடம், ‘நான் உனக்கு உதவி செய்கிறேன்” எனறான். | வளவன் நண்பனிடம் தான் அவனுக்கு உதவி செய்வதாகக் கூறினான். |
| 4 | கண்ணகி, “என்னுடைய சிலம்பில் மாணிக்கப் பரல்கள் உள்ளன” என்றாள். | கண்ணகி தன்னுடைய சிலம்பில் மாணிக்கப் பரல்கள் உள்ளதாகக் கூறினாள். |
| 5 | மணிமொழி, “அடுத்த ஆண்டு சென்னையில் படிப்பேன்” என்றாள். | மணிமொழி மறு ஆண்டு சென்னையில் படிக்கவிருப்பதாகக் கூறினாள். |
| 6 | ஆசிரியர்,“மாணவர்களே நன்கு படியுங்கள்” என்று கூறினார். | ஆசிரியர் மாணவர்களிடம் நன்கு படிக்குமாறு கூறினார். |
| 7. | மணியன் எழிலிடம், “தமிழ்ப் புத்தகம் கொடு” என்றான் | மணியன் எழிலிடம் தமிழ்ப் புத்தகம் கொடுக்கும்படி கேட்டான். |

**8. தொடரை மாற்றி அமைக்க :**

1. இனியன் நன்கு படித்தான்; முதல் மதிப்பெண் பெற்றான். **(கலவைத் தொடராக மாற்று)**
   **இனியன் நன்கு படித்ததால் முதல் மதிப்பெண் பெற்றான்.**
2. மழை பெய்தது. அணைகள் நிரம்பின. **(கலவைத் தொடராக மாற்று)**
   **மழை பெய்ததால் அணைகள் நிரம்பின.**
3. கந்தன் கடுமையாக உழைத்தான்; அதனால் பொருள் ஈட்டினான். **(கலவைத் தொடராக மாற்று)**
   **கந்தன் கடுமையாக உழைத்தால் பொருள் ஈட்டினான்.**
4. புயல் வீசியது. மரங்கள் சாய்ந்தன. **(தொடர்நிலைத்தொடராக மாற்றுக)**
   **புயல் வீசியது; அதானால் மரங்கள் சாய்ந்தன.**

பிரிவு- I **சொற்றொடர் வகைகள்** பகுதி - 3

**இயல் -1** (பாடநூல் -பக்கம் :27-28)

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரைச் செய்யப்பாட்டு வினையாக மாற்றும் போது, பொம்மை .....................செய்யப் ......... என வரும்

   **விடை : பூங்குழலியால் பொம்மை செய்யப்பட்டது**

2. **அழகன் பாடம் எழுதுகிறான்.** இத்தொடரில், ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்ததால் ................... தொடர் ஆகும்.

   **விடை : தனிநிலைத்தொடர்**

3. **அன்பரசன் திருக்குறளைக் கற்றான்.** இத்தொடர் பிறவினையாக மாறும்போது அன்பரசன் திருக்குறளைக் .................. என வரும்.

   **விடை : கற்பித்தான்**

**ஆ) தொடரை மாற்றி அமைக்க :**

1. திருக்குறளை அனைவரும் அறிவர். - வினாத் தொடராக அமைக்க.

   **விடை : திருக்குறளை அனைவரும் அறிவரோ?** அல்லது **திருக்குறளை எவர் அறிவர்?**

2. இமயமலை மிகவும் உயரமானது. - உணர்ச்சித்தொடராக மாற்றுக.

   **விடை : ஆ! எவ்வளவு உயரமானது இமயமலை! (என்னே, இமயமலையின் உயரம்!)**

3. கிளி கல்லால் அடிபட்டது. - உணர்ச்சித்தொடராக மாற்றுக.

   **விடை : ஐயோ! கிளி கல்லால் அடிபட்டதே!**

4. வாரியார்,“குழந்தாய்! நாள் தோறும் திருவாசகம் படிக்க வேண்டும்” என்றார். - அயற்கூற்றாக மாற்று

   **விடை : வாரியார் குழந்தையிடம் ஒவ்வொரு நாளும் திருவாசகம் படிக்குமாறு கூறினார்.**

5. நேற்று புயல் வீசியது; மரங்கள் சாய்ந்தன. - கலவைத்தொடராக மாற்றுக.

   **விடை : நேற்று புயல் வீசியதால் மரங்கள் சாய்ந்தன.**

**இ) தொடர்கள் எவ்வகையானவை?**

1. பிசிராந்தையார், நட்புக்கு இலக்கணமாகத் திகழ்கிறார். ( உணர்ச்சி, வினா, **செய்தி** )
2. குழந்தையை அடித்தது யார்? ( உணர்ச்சி, **வினா,** கட்டளை).
3. நம் நாட்டுக்கொடி தலைமையாசிரியரால் ஏற்றப்பட்டது. (தன்வினை, செய்வினை, **செயப்பாட்டு வினை** )
4. வயலில் ஆடுகள் மேய்ந்தில. (உடன்பாடு, **எதிர்மறை**, தன்வினை)
5. காந்தியடிகள் உண்மை பேசாமல் இரார். (எதிர்மறை, **பொருள் மாறா எதிர்மறை**, பிறவினை)
6. காந்தியடிகள் அரிச்சந்திர நாடகத்தை ஒருமுறை பார்த்தார். - **செய்தித் தொடர்.**
7. இப்படிச் செய்வது ஏய்த்துப் பிழைக்கும் செயலல்லவா? - **வினாத்தொடர்**

பிரிவு- I **வல்லினம் மிகும், மிகா இடங்கள்** பகுதி - 3

## வல்லினம் மிகும் இடங்கள்

* மெய்யெழுத்துகளில் **க், ச், ட், த், ப், ற்** என்னும் ஆறும் வல்லினம் எனப்படும்.
* இவற்றுள் **ட், ற்** ஆகிய இரண்டு எழுத்துகளும் மொழிக்கு (சொல்லுக்கு) முதலில் வாரா.
* எஞ்சியுள்ள க், ச், த், ப் ஆகிய நான்கு எழுத்துகளும் மொழிக்கு முதலில் வரும்.
* இந்த நான்கு எழுத்துகளும் வருமொழியில் முதலில் வரும்போது சில இடங்களில் வல்லினம் மிகுந்து புணரும்.
* இவ்விடங்கள் வல்லினம் மிகும் இடங்கள் எனப்படும். ஒற்று மிகுதல் என்றும் கூறுவர்.
* (எ-டு) 1. அப்படி + கூறினான் = அப்படி**க்**கூறினான் (வருமொழி முதல் **க்(க்+ ஊ)** எனவே **க்** மிகுந்து வந்துள்ளது)
* 2. இப்படி + செய்தான் = இப்படி**ச்**செய்தான் (வருமொழி முதல் **ச்(ச்+ எ)** எனவே **ச்** மிகுந்து வந்துள்ளது)
* வல்லினம் மிக வேண்டிய இடங்களில் மிகாமல் வந்தால் அது ஒற்றுப் பிழை என்றும் சந்திப்பிழை என்றும் அழைக்கப்படும். சந்திப்பிழைகள் ஏற்படும்போது பொருள் மாறுபடுகிறது.

(எ-டு) **1. வேலை தேடினான்.** (பிழைப்புக்காக ஒரு **வேலை (பணி)** தேடினான் என்று பொருள்படுகிறது)

**வேலைத் தேடினான்.** (வேல் என்னும் ஆயுதத்தைத் தேடினான் என்னும் பொருள் தருகிறது)

**2. மூடி போட்ட கிணறு** (கிணற்றில் தேவையற்ற பொருள்கள் விழுந்துவிடாமல் பாதுகாப்பதற்காக மூடி போடப்பட்டுள்ளது என்னும் பொருள் தருகிறது)

**மூடிப்போட்ட கிணறு** (கிணறு பயனற்றதால் மண்ணால் மூடப்பட்டது என்னும் பொருள் தருகிறது)

## அ) வல்லினம் மிகும் இடங்கள் :

**1. நிலைமொழி உயிரீறாக இருந்தால் வல்லினம்** (வருமொழிமுதலில் வரும்) **மிகும்**

1. பலா + பழம் = பலாப்பழம் (நிலைமொழி பலா என்பதில் ஆ உயிரீறு)
2. கறி + குழம்பு = கறி**க்**குழ்ப்பு (நிலைமொழி கறி என்பதில் இ உயிரீறு)
3. வழி + தடம் = வழி**த்**தடம் (நிலைமொழி வழி என்பதில் இ உயிரீறு)
4. வலை + தளம் = வலை**த்**தளம் (நிலைமொழி வலை என்பதில் ஐ உயிரீறு)

**2. அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்**

1. **அப்படி** + செய்தான் = அப்படி**ச்** செய்தான்
2. **இப்படி** + கூறினான் = இப்படி**க்** கூறினான்
3. **எப்படி** + தந்தான் = எப்படி**த்** தந்தான்

**3. அ, இ, உ** என்னும் சுட்டெழுத்துகளின் பின்னும் **எ** என்னும் வினா எழுத்தின் பின்னும் வல்லினம் மிகும்

1. **அ** + குதிரை = அ**க்**குதிரை
2. **இ** + சட்டை = இ**ச்**சட்டை
3. **உ** + பக்கம் = உ**ப்**பக்கம்
4. **எ** + பரிசு = எ**ப்**பரிசு

**4. அந்த, இந்த, எந்த** என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்

1. **அந்த** + பையன் = அந்த**ப்** பையன்
2. **இந்த** + சட்டை = இந்த**ச்** சட்டை
3. **எந்த** + பக்கம் = எந்த**ப்** பக்கம்

**5. இரண்டாம் வேற்றுமை விரியின் பின் வரும் வல்லினம் மிகும்.** (இரண்டாம் வேற்றுமைஉருபு **ஐ** வெளிப்பட வரும் சொல்லின் பின் )

1. **பாரியை** + கண்டார் = பாரியை**க்** கண்டார்
2. **பொருளை** + சேர்த்தான் = பொருளை**ச்** சேர்த்தான்
3. **புகையை** + குறைப்போம் = புகையை**க்** குறைப்போம்
4. **புகழை** + தேடினான் = புகழை**த்** தேடினான்

6. **நான்காம் வேற்றுமை (கு) விரியின் பின் வரும் வல்லினம் மிகும்.**

1. **மதுரைக்கு** + சென்றேன் = மதுரைக்கு**ச்** சென்றேன்
2. **எனக்கு** + கொடு = எனக்கு**க்** கொடு
3. **அவனுக்கு** + தம்பி = அவனுக்கு**த்** தம்பி
4. **வேலைக்கு** + கூலி = வேலைக்கு**க்** கூலி

7. **ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின்னால் வரும் வல்லினம் மிகும்.**

1. **காணா** + கண்கள் = காணா**க்**கண்கள்
2. **ஓடா** + தேர் = ஓடா**த்**தேர்
3. **செல்லா** + காசு = செல்லா**க்**காசு
4. **கேளா** + செவி = கேளா**ச்** செவி

8. **செய என்னும் அகர ஈற்று எச்சத்தின் பின்னால் வரும் வல்லினம் மிகும்.**

1. **ஓட** + கண்டான் = ஓட**க்**கண்டான்
2. **தேட** + சென்றான் = தேட**ச்** சென்றான்
3. **செல்ல** + பார்த்தான் = செல்ல**ப்** பார்த்தான்
4. **பாட** + தெரியும் = பாட**த்** தெரியும்

9. **சால, தவ என்னும் உரிச்சொற்களின் பின்னால் வரும் வல்லினம் மிகும்.**

1. **சால** + பசித்தது = சால**ப்**பசித்தது
2. **தவ** + சிறிது = தவ**ச்**சிறிது
3. **தவ** + புதல்வன் = தவ**ப்**புதல்வன்
4. **சால** + சிறந்தது = சால**ச்**சிறந்தது

10. **ஓரெழுத்து ஒருமொழிக்கு பின்னால் வரும் வல்லினம் மிகும்.**

1. **தீ** + சட்டி = தீ**ச்**சட்டி
2. **கை** + தடி = கை**த்**தடி
3. **தை** + பொங்கல் = தை**ப்**பொங்கல்
4. **ஈ** + கால் = ஈ**க்**கால்

11. **வன்றொடர்க்குற்றியலுகரத்தின் பின் வரும் வல்லினம் மிகும்.**

1. **கொக்கு** + கால் = கொக்கு**க்**கால்
2. **அச்சு** + பிழை = அச்சு**ப்** பிழை
3. **பட்டு** + சேலை = பட்டு**ச்** சேலை
4. **முத்து** + சிப்பி = முத்து**ச்** சிப்பி
5. **உப்பு** + கடல் = உப்பு**க்** கடல்
6. **நாற்று** + கட்டு = நாற்று**க்** கட்டு

## ஆ) வல்லினம் மிகா இடங்கள் :

1. **இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது**

சல சல, கட கட, பட பட, தர தர, குடு குடு

2. **அவை, இவை,** என்னும் சுட்டுச்சொற்கள், **எவை** என்னும் வினாச்சொல் ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

1. **அவை** + பறவைகள் = அவை பறவைகள்
2. **அவை** + சிறியன = அவை சிறியன
3. **இவை** + புதியன = இவை புதியன
4. **எவை** + தளிர்கள் = எவை தளிர்கள்

**3. அது, இது, சுட்டுச்சொற்களை அடுத்துவரும் வல்லினம் மிகாது.**

1. **அது** + பறவை = அது பறவை
2. **அது** + சங்கு = அது சங்கு
3. **இது** + புதிது = இது புதிது
4. **எது** + சால்பு = எது சால்பு

**4. எழுவாய்த்தொடரில் வரும் வல்லினம் மிகாது.**

1. **கண்ணகி** + பார்த்தாள் = கண்ணகி பார்த்தாள்
2. **தங்கை** + கேட்டாள் = தங்கை கேட்டாள்
3. **பறவை** + பறந்தது = பறவை பறந்தது
4. **தேன்மொழி** + பாடினாள் = தேன்மொழி பாடினாள்

**5. வினைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.**

1. **விடு** + கணை = விடுகணை
2. **சுடு** + சோறு = சுடுசோறு
3. **விரி** + கதிர் = விரிகதிர்
4. **பாய்** + புலி = பாய்புலி

**6. உம்மைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.**

1. **காய்** + **கனி** = காய்கனி
2. **தாய்** + **தந்தை** = தாய்தந்தை
3. **தாய்** + **சேய்** = தாய்சேய்
4. **முத்து** + **பவளம்** = முத்துபவளம்

**7. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.**

1. **கதை** + சொன்னார் = கதை சொன்னார்
2. **குறள்** + படித்தான் = குறள் படித்தான்
3. **கடல்** + தாவினான் = கடல் தாவினான்

**8. வியங்கோள் வினைமுற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது.**

1. **கற்க** + கசடற = கற்க கசடற
2. **வாழ்க** + தமிழ் = வாழ்க தமிழ்
3. **காண்க** + படம் = காண்க படம்

**10. விளித்தொடரை அடுத்து வரும் வல்லினம் மிகாது.**

1. **கண்ணா** + கேள் = கண்ணா கேள்
2. **முருகா** + சொல் = முருகா சொல்
3. **நண்பா** + கொடு = நண்பா கொடு

**வழிகாட்டிக் குறிப்புரை :**

வல்லினம் மிகும், மிகா இடங்களை நன்கு அறிந்து கொள்க.

பொத்தேர்வு 2ஆம் தாளில் பகுதி -3ல் வினா எண் 11. வல்லினம் மிகும் அல்லது மிகா இடங்களில் ஒன்றைச் சான்று தந்து விளக்கு எனக் கேட்கப்படுகிறது.(1-மதிப்பெண்)

மேலும், சந்திப்பிழைகள் நீக்கி எழுதுவதற்கும்(1- மதிப்பெண்) இப்பகுதி பயன்படும். இவை மட்டுமல்லாமல் கட்டுரைப் பகுதியையும் விடைகளையும் சந்திப்பிழைகளின்றி எழுதி முழு மதிப்பெண்கள் பெற்றிடவும் இப்பகுதி உறுதுணையாக உள்ளது.

தேர்வில் மட்டுமின்றி சந்திப்பிழைகளற்ற எழுத்து உங்கள் நன்மதிப்பையும் உயர்த்தும் என்பதை மனதிற் கொள்க.

பிரிவு- I **சந்திப்பிழைகளற்ற தொடர்** பகுதி - 3

**புறவய வினாக்கள்**

**பின்வரும் தொடர்களிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.**

**இயல் - 1** (பாடநூல் : பக்கம் - 28)

**I சந்திப்பிழையற்ற தொடர் எது?**

1. கயிறுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
2. **கயிற்றுக்கட்டிலில்** தன்னை மறந்து உறங்கினான். - **சந்திப்பிழையற்ற தொடர்**
3. கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.

**இயல் - 2** (பாடநூல் : பக்கம் -24)

**I. சந்திப்பிழைகளை நீக்கி எழுது.**

1. அனைத்து துறைகளிலும் ஆண்களை போலவே பெண்களுக்கும் அரசு பணி கொடுக்க வேண்டும்.
   அனைத்து**த்** துறைகளிலும் ஆண்களை**ப்** போலவே பெண்களுக்கும் அரசு**ப்** பணி கொடுக்க வேண்டும்.
2. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை பயணமாம்.
   ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை**ப்** பயணமாம்.

**இயல் - 3** (பாடநூல் : பக்கம் -73)

1. ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமராவ் அம்பேத்கராக மாறினார்.
   ஆசிரியர் பெயரை**த்** தம் பெயருடன் சேர்த்து பீமராவ் அம்பேத்கராக மாறினார்.
2. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.
   ஏழைகளுக்கு**ப்** பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று**த்**தந்தார்.

**இயல் - 4** (பாடநூல் : பக்கம் -93)

1. மேடை பேச்சு மிகுந்த பலனை தரவல்லது.
   மேடை**ப்**பேச்சு மிகுந்த பலனை**த்**தரவல்லது.
2. மக்களை இலட்சிய பார்வையிலே அழைத்து செல்லும் வன்மையுடையதே மேடை பேச்சு.
   மக்களை இலட்சிய**ப்**பார்வையிலே அழைத்து**ச்**செல்லும் வன்மையுடையதே மேடை**ப்**பேச்சு.
3. திரை படம் எடுக்க பயன்படும் பட சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
   திரை**ப்**படம் எடுக்க**ப்**பயன்படும் பட**ச்**சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
4. திரை படம் மக்களை தன்பால் ஈர்த்து கட்டி. போட வல்லது.
   திரை**ப்**படம் மக்களை**த்**தன்பால் ஈர்த்து**க்**கட்டி.**ப்**போட வல்லது.

**இயல் - 6** (பாடநூல் : பக்கம் -132)

1. மனிதஇனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது.
   மனிதஇனத்தின் மரபு**ச்**செல்வமாக**த்**தமிழ்மொழி விளங்குகிறது.

**இயல் - 7** (பாடநூல் : பக்கம் -161)

2. தமிழில் வரலாற்று கருத்துகளையும், பண்பாட்டு கூறுகளையும் காணமுடியும்.
   தமிழில் வரலாற்று**க்**கருத்துகளையும், பண்பாட்டு**க்**கூறுகளையும் காணமுடியும்.

**இயல் - 9** (பாடநூல் : பக்கம் -212)

1. வள்ளலார் அருளிய வழிகளை கடை பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.
   வள்ளலார் அருளிய வழிகளை**க்** கடை**ப்**பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.
2. அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசன புதுமையை புகுத்தினார்.
   அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசன**ப்**புதுமையை**ப்**புகுத்தினார்.

**இயல் - 10** (பாடநூல் : பக்கம் - 235)

3. கை தொழில் ஒன்றை கற்று கொள்.
   கை**த்**தொழில் ஒன்றை**க்**கற்று**க்**கொள்.
4. பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், கடல் கடந்து செல்ல கூடாதெனவும் கூறி வந்தனர்.
   பெண்கள் குடும்பத்தை**ப்**பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், கடல் கடந்து செல்ல**க்**கூடாதெனவும் கூறி வந்தனர்.

## கூடுதல் வினாக்கள்

**1. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்கு**

**அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்**

**சான்று :**

1. **அப்படி** + செய்தான் = அப்படி**ச்** செய்தான்
2. **இப்படி** + கூறினான் = இப்படி**க்** கூறினான்
3. **எப்படி** + தந்தான் = எப்படி**த்** தந்தான்

**2. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்கு**

**இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது.**

**சான்று :** சல சல, கட கட, பட பட, தர தர, குடு குடு

பிரிவு- I **தொகைச் சொற்கள்** பகுதி - 3

**தொகைச் சொற்கள் :** ஒரு தலைப்பின் கீழ் வரும் சொற்களை எண்ணிக்கையின் அடிப்படையில் தொகுத்துச் சொல்லப்படும் சொற்கள் தொகைச் சொற்கள் எனப்படும்.

(எ-டு) சேரர், சோழர் பாண்டியர் ஆகிய மூன்று வேந்தர்களையும் குறிப்பிடும் இடத்து மூவரின் பெயர்களையும் குறிப்பிடாமல் மூவேந்தர் எனத் தொகுத்துக் கூறுகிறோம். இவ்வாறு பல தொகைச் சொற்கள் வழக்கில் உள்ளன. தொகைச் சொற்களை விரித்துக் காண அறிந்து கொள்ள வேண்டும்.

## தொகைச் சொற்களை விரித்து எழுதுக

| | | |
|---|---|---|
| 1. | இருதிணை | - உயர்திணை, அ∴றிணை |
| 2. | இருவினை | - நல்வினை, தீவினை |
| 3. | ஈரெச்சம் | - பெயரெச்சம், வினையெச்சம் |
| 4. | இருபால் | - ஆண்பால், பெண்பால் |
| 5. | இருமை | - இம்மை, மறுமை |
| 6. | முத்தமிழ் | - இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் |
| 7. | முக்கனி | - மா, பலா, வாழை |
| 8. | முக்காலம் | - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் |
| 9. | மூவேந்தர் | - சேரர், சோழர், பாண்டியர் |
| 10. | மூவுலகம் | - விண்ணுலகம், மண்ணுலகம், பாதாள உலகம் |
| 11. | முப்படை | - தரைப்படை, கப்பற்படை, விமானப்படை |
| 12. | முப்பால் | - அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் |
| 13. | முந்நீர் | - ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர் |
| 14. | மூவிடம் | - தன்மை, முன்னிலை, படர்க்கை |
| 15. | நாற்றிசை | - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு |
| 16. | நாற்படை | - காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை |
| 17. | நாற்பொருள் | - அறம், பொருள், இன்பம், வீடு |
| 18. | நானிலம் | - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |
| 19. | நாற்குணம் | - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு |
| 20. | நான்மறை | - ரிக், யஜூர், சாமம், அதர்வணம் |
| 21. | ஐம்பொறி | - மெய், வாய், கண், மூக்கு, செவி |
| 22. | ஐம்புலன்கள் | - காணல், கேட்டல், உண்ணல், உயிர்த்தல், உற்றறிதல் |
| 23. | ஐந்திணை | - குறிஞ்சித்திணை, முல்லைத் திணை, மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத்திணை |
| 24. | ஐந்திலக்கணம் | - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி |
| 25. | ஐம்பால் | - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் |
| 24. | அறுசுவை | - இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கசப்பு |
| 25. | எண்டிசை | - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு |

**வேறுபடுத்தி அறிக :** விரித்து எழுதுதல் என்பது வேறு. பிரித்து எழுதுதல் என்பது வேறு.

(இருபால், முப்பால், ஐம்பால்), (முப்படை, நாற்படை), (இருதிணை, ஐந்திணை) ஆகிய தொகைச் சொற்களை வேறுபடுத்தி விரித்து அறிக.

## இயல் 1-10 ஒருமைப் பன்மைப் பிழைகள் பகுதி - 3

### இயல் - 1 (பாடநூல் : பக்கம் - 28)

**I. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?**

1. அவன் கவிஞன் அல்ல.
2. அவன் கவிஞன் அன்று.
3. அவன் கவிஞன் அல்லன்.

**விடை : அவன் கவிஞன் அல்லன் - என்பது ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர்**

### இயல் - 2 (பாடநூல் : பக்கம் -44)

**I. ஒருமைப் பன்மைப் பிழைகளை நீக்கி எழுது.**

1. கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவரை மன்னரும் பணிந்தான்.
   கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவரை மன்னரும் **பணிந்தனர்**
2. பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
   பெண்கள் பெற **வேண்டியவை** பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.

### இயல் - 3 (பாடநூல் : பக்கம் -73)

1. இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது.
   இப்போது அவர் கையில் கோப்புகள் **இருந்தன**
2. வயது வந்தோர்க்கு வாக்குரிமை, பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தது.
   வயது வந்தோர்க்கு வாக்குரிமை, பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் **புகழ்ந்தன.**

### இயல் - 4 (பாடநூல் : பக்கம் -93)

1. புலவர்கள் பொங்கற்புதுநாளின் மாண்பினை உணர்ந்து கொண்டாடினார்.
   புலவர்கள் பொங்கற்புதுநாளின் மாண்பினை உணர்ந்து **கொண்டாடினார்கள்.**
2. மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றது.
   மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி **போன்றவை.**

### இயல் - 5 (பாடநூல் : பக்கம் -116)

1. ஈஸ்ட்மன் என்பார் சுருள்சுருளாகப் பிலிம் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தனர்.
   ஈஸ்ட்மன் என்பார் சுருள் சுருளாகப் பிலிம் தயாரிக்கும் முறையைக் **கண்டுபிடித்தார்.**
2. இயங்குரு படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.
   இயங்குரு படங்களைக் குழந்தைகள் விரும்பிப் **பார்க்கின்றார்கள்.**
3. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப் படக்கருவி பயன்படுகின்றன.
   திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப் படக்கருவி **பயன்படுகின்றது.**
4. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில் நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் இருக்கின்றது.
   நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில் நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் **இருக்கின்றன.**
5. இன்று பேருந்துகள் ஓடாது.
   இன்று பேருந்துகள் **ஓடா.**
   **(ஓடாது - ஒருமை, ஓடா - பன்மை, பன்மையில் து என்னும் ஒன்றன்பால் விகுதி இடம்பெறாது.)**
6. ஓர் அணில் மரத்தில் ஏறின.
   ஓர் அணில் மரத்தில் **ஏறியது.**
7. நான் வாங்கிய நூல் இது அல்ல.
   நான் வாங்கிய நூல் இது **அன்று.**

**இயல் - 6** (பாடநூல் : பக்கம் -132)

1. காவிரிப்பூம்பட்டினத்தில் பொருள்கள் மண்டிக் கிடந்தது.
   காவிரிப்பூம்பட்டினத்தில் பொருள்கள் மண்டிக் **கிடந்தன**.
2. தமிழர்கள் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.
   தமிழர்கள் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் **பெற்றிருந்தது.**

**இயல் - 8** (பாடநூல் : பக்கம் -186)

1. ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.
   ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் **கொண்டிருந்தாள்.**
2. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா.
   மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் **போதாது.**

**இயல் - 10** (பாடநூல் : பக்கம் -234)

1. பெண்கள் எல்லாத்துறைகளிலும் பணிபுரிகின்றாள்.
   பெண்கள் எல்லாத்துறைகளிலும் **பணிபுரிகின்றார்கள்.**
2. தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் உள்ளது.
   தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் **உள்ளன.**
3. அவன் கவிஞன் அல்ல.
   அவன் கவிஞன் **அல்லன்**

பிரிவு- I **வழூஉச்சொற்களும் திருத்தமும்** பகுதி - 3

**இயல் - 1** (பாடநூல் : பக்கம் - 28)

**1. வழூஉச் சொல்லற்ற தொடர் எது?**

1. வலது பக்கம் சுவறில் எழுதாதே.
2. வலப்பக்கச் சுவரில் எழுதாதே. - **வழூஉச் சொல்லற்ற தொடர்**
3. வலப்பக்கச சுவற்றில் எழுதாதே.

**2. பின்வரும் தொடர்களில் உள்ள வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக**

1. அவன் வீண் **சிலவு** செய்கிறான். - அவன் வீண் **செலவு** செய்கிறான்.
2. **வலது** பக்கச் **சுவற்றில்** எழுதாதே. - **வலப்**பக்கச் **சுவரில்** எழுதாதே
3. **இடது** பக்கச் **சுவற்றில்** எழுதாதே. - **இடப்**பக்கச் **சுவரில்** எழுதாதே
4. **எகன மொகனயாப்** பேசுறான் - **எதுகை மோனையாகப்** பேசுகிறான்
5. **வேர்வை** சிந்த **உளைக்க** வேண்டும். - **வியர்வை** சிந்த **உழைக்க** வேண்டும்.
6. அவன் **வேப்பிலை** பறித்தான் - அவன் **வேப்பந்தழை** பறித்தான்
7. தம்பி **இங்கிட்டு** வா - தம்பி **இங்கு** வா
8. என் **உசிர்** நீ தானே! - என் **உயிர்** நீ தானே!
9. அவர்கள் இருவருக்கும் இடையே **விவாதம்** நடந்தது.
   அவர்கள் இருவருக்கும் இடையே **உரையாடல்** நடந்தது.
10. காலையல் **நாஷ்டா** சாப்பிட்டான்.
    காலையல் **சிற்றுண்டி** சாப்பிட்டான்.
11. **ஆத்தங்கரை அருகாமையில்** நாகரிகம் தோன்றியது.
    **ஆற்றங்கரை அருகில்** நாகரிகம் தோன்றியது.

**3. வழூஉச் சொற்களும் திருத்தமும்**

| | வழூஉச் சொற்கள் | திருந்திய சொற்கள் | | வழூஉச் சொற்கள் | திருந்திய சொற்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | வலது பக்கம் | **வலப்பக்கம்** | 12 | ஆத்தங்கரை | **ஆற்றங்கரை** |
| 2 | இடது பக்கம் | **இடப்பக்கம்** | 13 | சீவக்காய் | **சிகைக்காய்** |
| 3 | கவுறு, கயறு | **கயிறு** | 14 | அருவாமனை | **அரிவாள்மணை** |
| 4 | புஞ்சை | **புன்செய்** | 15 | அவரக்கா | **அவரைக்காய்** |
| 5 | நஞ்சை | **நன்செய்** | 16 | சிகப்பு | **சிவப்பு** |
| 6 | துளிர் | **தளிர்** | 17 | எண்ணை | **எண்ணெய்** |
| 7 | முயற்சித்தான் | **முயன்றான்** | 18 | வெண்ணை | **வெண்ணெய்** |
| 8 | காத்து | **காற்று** | 19 | சுடுதண்ணீர் | **சுடுநீர் (வெந்நீர்)** |
| 9 | பாவக்காய் | **பாகற்காய்** | 20 | அருவா | **அரிவாள்** |
| 10 | தலகாணி | **தலையணை** | 21 | கோடாலி | **கோடரி** |
| 11 | புண்ணாக்கு | **பிண்ணாக்கு** | 22 | வெத்தல | **வெற்றிலை** |

பிரிவு- I **பிறமொழிச்சொற்கள் நீக்கி எழுதுதல்** பகுதி - 3

**பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச்சொற்களை எழுதுக**

**இயல் - 1** (பாடநூல் : பக்கம் - 28)

**பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?**

1. அவர்கள் இருவருக்கும் இடையே விவாதம் நடந்தது.
2. **அவர்கள் இருவருக்கும் இடையே உரையாடல் நடந்தது. - பிறமொழிச்சொல்லற்ற தொடர்**
3. அவர்கள் இருவருக்கும் இடையே கான்வர்சேசன் நடந்தது.

**இயல் - 3** (பாடநூல் : பக்கம் -83)

1. **ஷேத்திரங்கள்** தோறும் சென்று **விக்கிரகங்களை** வழிபடுக.
   **கோவில்கள்** தோறும் சென்று **தெய்வத்திருவுருவங்களை** வழிபடுக.
2. **இம்மார்க்கத்தில் யாத்திரை** செல்லுங்கள்.
   **இவ்வழியில் பயணம்** செல்லுங்கள்.
3. இந்த **ஷர்ட்** மிகவும் **காஸ்ட்லியானது.**
   இந்தச் **சட்டை அதிக விலையுடையது.**
4. நாளை நடக்கவிருக்கும் **மேட்சில்** இந்தியா கண்டிப்பாக **வின்** செய்யும்
   நாளை நடக்கவிருக்கும் **போட்டியில்** இந்தியா கண்டிப்பாக **வெற்றி பெறும்.**
5. நான் இந்த **காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்.**
   நான் இந்தக் **கல்லூரியின் முன்னாள் மாணவர்.**

**இயல் - 9** (பாடநூல் : பக்கம் -224)

1. வேலன் சுயதொழிலில் அதிக **இலாபம்** ஈட்டினான்.
   வேலன் சுயதொழிலில் அதிக **வருவாய்** ஈட்டினான்.
2. அந்த **விஞ்ஞானியின்** கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.
   அந்த **அறிவியல் அறிஞரின்** கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.
3. அனைவரையும் **உண்ணாவிரதப்** போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.
   அனைவரையும் **உண்ணா நோன்புப்** போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.
4. அவர் உடற்கூறு மருத்துவத்தில் சிறந்த **நிபுணர்**
   அவர் உடற்கூறு மருத்துவத்தில் சிறந்த **நிபுணர்**
5. **அலங்கரித்துக்** கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.
   **ஒப்பனை** செய்து கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.

| | பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் | | பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் | | பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அங்கத்தினர் | **உறுப்பினர்** | 11 | ஆசீர்வாதம் | **வாழ்த்து** | 21 | நாஷ்டா | **சிற்றுண்டி** |
| 2 | அதிகாரி | **அலுவலர்** | 12 | இலஞ்சம் | **கையூட்டு** | 22 | பாக்கி | **நிலுவை** |
| 3 | அதிபர் | **தலைவர்** | 13 | இலாபம் | **வருவாய்** | 23 | கஜானா | **கருவூலம்** |
| 4 | அந்நியர் | **அயலார்** | 14 | உத்தரவு | **ஆணை** | 24 | விஞ்ஞானம் | **அறிவியல்** |
| 5 | அபிஷேகம் | **நீராட்டு** | 15 | உத்தியோகம் | **பணி** | 25 | ஜனங்கள் | **மக்கள்** |
| 6 | அபூர்வம் | **புதுமை** | 16 | உபயோகம் | **பயன்** | 26 | நிபுணர் | **வல்லுநர்** |
| 7 | அலங்காரம் | **ஒப்பனை** | 17 | கிராமம் | **சிற்றூர்** | 27 | ஆஸ்பிடல் | **மருத்துவமனை** |
| 8 | அனுமதி | **இசைவு** | 18 | குமாரன் | **மகன்** | 28 | டீ ஸ்டால் | **தேநீர்க்கடை** |
| 9 | ஆபத்து | **இடர்** | 19 | சாவி | **திறவுகோல்** | 29 | பஸ் ஸ்டாண்ட் | **பேருந்து நிலையம்** |
| 10 | ஆராதனை | **வழிபாடு** | 20 | நஷ்டம் | **இழப்பு** | 30 | போஸ்ட் ஆபிஸ் | **அஞ்சலகம்** |

பிரிவு- I **நிறுத்தற்குறியிட்டு எழுதுதல்** பகுதி - 3

**நிறுத்தற்குறிகள் :** நிறுத்தற்குறிகள் தொடரைப் பொருள் உணர்ந்து படிப்பதற்கு மிகவும் உறுதுணையாக உள்ளன. நிறுத்தற்குறிகள் இடம் மாறும் போது பொருளும் மாறிவிடுகின்றன.

1. **இன்றுமுதல், தோசைக்குத் துவையல் இல்லை.**
2. **இன்று, முதல் தோசைக்குத் துவையல் இல்லை.**

முதலாவது தொடர் இன்றிலிருந்து தோசைக்குத் துவையல் இல்லை என்று பொருள் தருகிறது.

இரண்டாவது தொடர் இன்று முதலாவது தோசைக்கு மட்டும் துவையல் இல்லை என்று பொருள் தருகிறது. இந்தப் பொருள் வேறுபாட்டிற்குக் காரணம் நிறுத்தற் குறியே.

காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக்குறி(உணர்ச்சிக்குறி), வினாக்குறி, ஒற்றை மேற்கோள்குறி, இரட்டை மேற்கோள்குறி ஆகியவற்றைப் பற்றி இங்கு காணலாம்.

### காற்புள்ளி ( , )

**பின்வரும் இடங்களில் காற்புள்ளி இட வேண்டும்.**

1. பொருள்களை எண்ணும் நிலையில் காற்புள்ளி இட வேண்டும்.

(எ-டு) மா,பலா,வாழை என்பன முக்கனிகள்.

2. ஒரு தொடரில் விளியை அடுத்து காற்புள்ளி இட வேண்டும்.

(எ-டு) மாணவர்களே, வெற்றி உங்கள் கைகளில் உள்ளது.

3. முகவரியில் இறுதி வரி தவிர்த்த ஏனைய வரிகளில் காற்புள்ளி இட வேண்டும்.

(எ-டு) **த. மணிகண்டன்,**
**10, வடக்குத் தெரு,**
**மேட்டுப்பட்டி.** (இறுதி வரியில் முற்றுப்புள்ளியிட வேண்டும்)

### அரைப்புள்ளி ( ; )

**பின்வரும் இடங்களில் அரைப்புள்ளி இட வேண்டும்.**

1. ஒரே எழுவாயில் பல தொடர்கள் தொடர்ந்து வருகின்ற இடங்களில் அரைப்புள்ளி இட வேண்டும்.

(எ-டு) பேறறிஞர் அண்ணா சிறந்த பேச்சாளர்; எழுத்தளர்; நாடக ஆசிரியர் எனப் பன்முகங்கொண்டவர்.

2. ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும் எதிர் மறைக் கருத்தும் வருகின்ற இடங்களிலும் அரைப்புள்ளி வரும்.

(எ-டு) சிலர் சொல்வதுண்டு; செய்வதில்லை.

### முக்காற்புள்ளி ( : )

**பின்வரும் இடங்களில் முக்காற்புள்ளி இட வேண்டும்.**

1. சிறு தலைப்புகளுக்குப் பின் முக்காற்புள்ளி இடுதல் வேண்டும்.

**(எ-டு) முப்பால் : அறம், பொருள், இன்பம்.**

2. நூற்பகுதி எண்களை எழுதும் போது முக்காற்புள்ளி வரும்.

(எ-டு) **மத்தேயு, 15: 2**

**3.** விண்ணப்பம் போன்றவற்றில் விவரங்களைப் பட்டியல் முறையில் தரும்போது முக்காற்புள்ளி இடுதல் வேண்டும்.

**பெயர்** :
**தந்தை பெயர்** :
**பிறந்த தேதி** :
**தேசிய இனம்** :
**கல்வித்தகுதி** :
**முகவரி** :

**முற்றுப்புள்ளி ( . )**

**பின்வரும் இடங்களில் முற்றுப்புள்ளி இட வேண்டும்.**

1. சொற்றொடரின் முடிவில் முற்றுப்புள்ளி இடுதல் வேண்டும்.

**(எ-டு)** சூழலைப் பாதுகாக்க வேண்டும்.

2. முகவரி இறுதியில் முற்றுப்புள்ளி வரும்.

(எ-டு) **த. மணிகண்டன்,**

**10, வடக்குத் தெரு,**

**மேட்டுப்பட்டி.** (இறுதி வரியில் மட்டும் முற்றுப்புள்ளியிட வேண்டும்)

**3.** பெயரில் தலைப்பெழுத்தை அடுத்து முற்றுப்புள்ளியிட வேண்டும்.

(எ-டு) **த. மணிகண்டன்**

**இரா. எழிலன்**

**3.** நாள் இறுதி, சொற்சுருக்கம் முதலிய இடங்களில் முற்றுப்புள்ளியிட வேண்டும்.

(எ-டு) **21.11.1996.**

**தொல். சொல். 25. (தொல்காப்பியம் சொல்லதிகாரம் என்பனவற்றின் சுருக்கம்)**

**வினாக்குறி ( ? )**

**ஒரு வினாத்தொடர் முற்றுத் தொடராகவும் நேர் கூற்றுத் தொடராகவும் இருந்தால், இறுதியில் வினாக்குறி இட வேண்டும்.**

எ-டு) 1. சிலப்பதிகாரத்தை இயற்றியது யார்?

2. பாரதி எங்கு பிறந்தார்?

**உணர்ச்சிக்குறி ( ! )**

**வியப்பு, அவலம் வாழ்த்து, வைதல், வரவேற்றல் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் உணர்ச்சித்தொடர்களின் பின் உணர்ச்சிக்குறி இட வேண்டும்.**

எ-டு) 1. என்னே, திருக்குறளின் பெருமை!

2. வருக! வருக!

**ஒற்றை மேற்கோள் குறி ( ‘ ’ )**

**ஓர் எழுத்தோ சொல்லோ தன்னையே சுட்டும் தற்சுட்டின் கண்ணும் பிறர் கூற்றாக வரும் இடத்தும் கட்டுரை, நூற்பெயர் வருமிடத்தும் ஒற்றை மேற்கோள்குறி இட வேண்டும்.**

எ-டு) 1. **‘ஐ’** என்னும் எழுத்து குறுகி ஒலிப்பது ஐகாரக்குறுக்கம்.

2. **‘செய்யும்’** என்பது பெயரெச்ச வாய்பாடுகளுள் ஒன்று.

3. வள்ளலார், **‘வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன்’** என்று பயிர்வாடத் தாம் வாடினார்.

4. கம்பர், **‘இராமாயணம்’** என்னும் காவியம் படைத்தார்.

**இரட்டை மேற்கோள் குறி ( “ ” )**

**நேர்கூற்றுத் தொடரிலும் மேற்கோள் தொடரிலும் இரட்டை மேற்கோள்குறி இட வேண்டும்.**

எ-டு) 1. இராமன், **“நாளை வருவேன்”** என்றான்.

2. **“ஒழுக்கமுடைமை குடிமை”** என்றார் வள்ளுவர்.

## 1. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.

1. யாதும் ஊரே யாவரும் கேளிர் என உலக மக்களை ஒன்றிணைத்து உறவுகளாக்கிய உயர்சிந்தனை மிக்கது புறநானூறு

   "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என உலக மக்களை ஒன்றிணைத்து உறவுகளாக்கிய உயர்சிந்தனை மிக்கது புறநானூறு.

2. பெண்கல்வி பெண்ணுரிமை சொத்துரிமை அரசுப்பணி ஆகியன அடிப்படைத் தேவைகள்

   பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி ஆகியன அடிப்படைத் தேவைகள்.

3. சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும்

   சட்டத்தை மதிப்போம்; குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம்; சட்டம் நம்மைக் காக்கும்.

4. சொல்லக் கருதும் செய்தியைச் சுவையுடன் சொல்லுதல் வேண்டும் நிரல்படச் சொல்லுதல் வேண்டும் திறம்படச் சொல்லுதல் வேண்டும் தெளிவாகவும் சொல்லுதல் வேண்டும்

   சொல்லக் கருதும் செய்தியைச் சுவையுடன் சொல்லுதல் வேண்டும்; நிரல்படச் சொல்லுதல் வேண்டும்; திறம்படச் சொல்லுதல் வேண்டும்; தெளிவாகவும் சொல்லுதல் வேண்டும்.

5. கதைப்படங்கள் மட்டுமின்றிக் கருத்துப்படங்கள் செய்திப்படங்கள் விளக்கப்படங்கள் கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது

   கதைப்படங்கள் மட்டுமின்றிக் கருத்துப்படங்கள், செய்திப்படங்கள், விளக்கப்படங்கள், கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.

6. என்னே அவள் துணிவு

   என்னே, அவள் துணிவு!

7. உடம்பார் அழியின் உயிரார் அழிவர் என்பார் திருமூலர்

   'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பார் திருமூலர்.

8. காந்தியடிகள் நான் மொழியால் குஜராத்தியன் நாட்டால் இந்தியன் உலக நிலையில் உலகன் ஆனால் மனிதனாக இருத்தல் வேண்டும் என்றார்

   காந்தியடிகள், "நான் மொழியால் குஜராத்தியன்; நாட்டால் இந்தியன்; உலக நிலையில் உலகன்; ஆனால், மனிதனாக இருத்தல் வேண்டும்" என்றார்.

9. இராமலிங்கர் அவ்வழியே சென்ற போது இதோ ஒரு உத்தம மனிதர் போகிறார் என்று கூறினார்

   இராமலிங்கர் அவ்வழியே சென்ற போது, 'இதோ ஓர் உத்தம மனிதர் போகிறார்' என்று கூறினார்.

10. தொலைக்காட்சி குளிரூட்டும்கருவி செல்பேசி கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன

    தொலைக்காட்சி, குளிரூட்டும்கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.

## 2. பின்வரும் சொற்களுக்கு இரு பொருள் தருக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நாண் | கயிறு, வெட்கம் | 13 | வேங்கை | வேங்கைப்புலி, வேங்கை மரம் |
| 2 | மறை | வேதம், மறைத்துக்கொள் | 14 | திரை | அலை, திரைச்சீலை, தோற்சுருக்கம் |
| 3 | பிடி | பெண்யானை, பிடித்துக்கொள் | 15 | இசை | புகழ், சம்மதித்தல், பாட்டிசை |
| 4 | வேழம் | யானை, கரும்பு, மூங்கில் | 16 | மா | விலங்கு, மாமரம், குதிரை |
| 5 | திங்கள் | சந்திரன், மாதம், | 17 | மடி | சோம்பல், தாய்மடி, இறத்தல் |
| 6 | மதி | சந்திரன், அறிவு, மதித்து நட | 18 | மாடு | செல்வம், விலங்கு |
| 7 | படி | நூலைப்படி, வாயிற்படி | 19 | ஆறு | நதி, வழி, எண்ணுப்பெயர் |
| 8 | நூல் | கல்வி நூல், பஞ்சு நூல் | 20 | நாடு | தேசம், விரும்பு |
| 9 | பார் | உலகம், காண் | 21 | முயல் | சிறு விலங்கு, முயற்சி செய் |
| 10 | மெய் | உண்மை, உடல் | 22 | பள்ளி | கல்விச்சாலை, படுக்கை |
| 11 | நகை | அணிகலன், சிரிப்பு | 23 | கோடி | எண்ணுப்பெயர், புதிய ஆடை |
| 12 | மணம் | வாசனை, திருமணம் | 24 | அணி | அணிகலன், குழு |

பிரிவு- I **மரபுத் தொடர்கள்** பகுதி - 3

**மரபுத் தொடர்கள் :** ஒரு சொல்லை முன்னோர் எப்பொருளால் எவ்வாறு கூறினார்களோ அவ்வாறே நாமும் கூறுவது மரபு ஆகும். இளமைப் பெயர்கள், ஒலிமரபு வினைமரபு, முதலிய மரபுத்தொடர்களை நாம் அறந்து பயன்படுத்தல் வேண்டும்.

| | **விலங்குகள்** | **இளமைப்பெயர்கள்** |
|---|---|---|
| 1 | ஆடு | ஆட்டுக்குட்டி |
| 2 | மான் | மான்கன்று |
| 3 | கீரி | கீரிப்பிள்ளை |
| 4 | சிங்கம் | சிங்கக்குருளை |
| 5 | கோழி | கோழிக்குஞ்சு |
| 6 | புலி | புலிப்பறழ் |
| | **ஒலிமரபு** | |
| 1 | **ஆந்தை** | **அலறும்** |
| 2 | **கிளி** | **பேசும் / கொஞ்சும்** |
| 3 | **மயில்** | **அகவும்** |
| 4 | **குயில்** | **கூவும்** |
| 5 | **காக்கை** | **கரையும்** |
| 6 | **கூகை** | **குழறும்** |
| 7 | **கோழி** | **கொக்கரிக்கும்** |
| 8 | **சேவல்** | **கூவும்** |
| 9 | **பசு** | **கத்தும்** |
| 10 | **ஆடு** | **கத்தும்** |
| 11 | **சிங்கம்** | **முழங்கும்** |
| 12 | **புலி** | **உறுமும்** |
| 13 | **பன்றி** | **உறுமும்** |
| 14 | **நரி** | **ஊளையிடும்** |
| 15 | **நாய்** | **குரைக்கும்** |
| 16 | **எலி** | **கீச்சிடும்** |
| 17 | **குதிரை** | **கனைக்கும்** |
| 18 | **யானை** | **பிளிறும்** |
| 19 | **எருது** | **எக்காளமிடும்** |
| 20 | **குரங்கு** | **அலப்பும்** |
| 21 | **பூனை** | **சீறும்** |
| 22 | **பறா** | **குனுகும்** |
| 23 | **வண்டு** | **முரலும்** |

| | வினை மரபு | |
|---|---|---|
| 1 | முறுக்கு | தின்றாள் |
| 2 | **சோறு** | **உண்டான்** |
| 3 | **பால்** | **பருகினான்** |
| 4 | **தண்ணீர்** | **குடித்தான்** |
| 5 | அப்பம் | தின்றான் |
| 6 | **பூ** | **பறித்தான்** |
| 7 | கதிர் | கொய்தான் |
| 8 | நாற்று | நட்டான் |
| 9 | களை | பறித்தான் |
| 10 | **மரம்** | **வெட்டினான்** |
| 11 | சிலை | வடித்தான் |
| 12 | **ஓவியம்** | **புனைந்தான்** |
| 13 | வண்ணம் | தீட்டினான் |
| 14 | **ஆடை** | **நெய்தான்** |
| 15 | நூல் | நூற்றான் |
| 16 | கயிறு | திரித்தான் |
| 17 | **செய்யுள்** | **இயற்றினான்** |
| 18 | **கூடை** | **முடைந்தார்** |
| 19 | **அம்பு** | **எய்தான்** |
| 20 | வேல் | எறிந்தான் |
| 21 | வாள் | வீசினான் |
| 22 | ஏறு | தழுவினான் |
| 23 | **தாம்பூலம்** | **தரித்தான்** |
| 24 | திருநீறு | அணிந்தான் |
| 25 | குழல் | ஊதினான் |
| 26 | பறை | அறைந்தான் |
| 27 | வீணை | மீட்டினான் |
| 28 | பாட்டு | பாடினான் |
| 29 | சிற்பம் | வடித்தான் |
| 30 | **மாத்திரை** | **விழுங்கினான்** |
| 31 | **சுவர்** | **எழுப்பினான்** |
| 32 | **உமி** | **கருக்கினான்** |
| | | |

| | தொகுப்புப்பெயர்கள் |
|---|---|
| 1 | வாழைத்தோட்டம் |
| 2 | சோளக்கொல்லை |
| 3 | கம்பங்கொல்லை |
| 4 | தென்னந்தோப்பு |
| 5 | மாந்தோப்பு |
| 6 | ஆட்டுமந்தை |
| 7 | ஆநிரை (பசுநிரை) |
| 8 | எறும்புச்சாரை |
| 9 | பறவைக்கூட்டம் |
| 10 | கற்குவியல் |
| | **வாழிடம்** |
| 1 | மாட்டுத் தொழுவம் |
| 2 | ஆட்டுப்பட்டி |
| 3 | குதிரைலாயம் |
| 4 | சிங்கக்குகை |
| 5 | எறும்புப் புற்று |
| 6 | பாம்புப்புற்று |
| 7 | குருவிக்கூடு |
| 8 | சிலந்திவலை |
| 9 | தேன்கூடு |
| | **சினைப்பெயர்கள்** |
| 1 | வேப்பந்தழை |
| 2 | மாந்தளிர் |
| 3 | தென்னங்கீற்று |
| 4 | பனையோலை |
| 5 | மூங்கில்இலை |
| 6 | சோளத்தட்டை |
| 7 | கரும்புத்தோகை |
| 8 | யானைத்தந்தம் |
| 9 | மான் கொம்பு |
| 10 | மயில்தோகை |

## பிரிவு- I மரபுத்தொடரும் பொருளும் பகுதி - 3

1. கொடிகட்டிப் பறந்தார் - சிறந்து விளங்கினார்
2. எடுப்பார் கைப்பிள்ளை - சிந்திக்காமல் பிறர் சொல்வதைக் கேட்டு நடப்பவர்
3. முதலைக் கண்ணீர் - பொய் அழுகை
4. ஆகாயத் தாமரை - இல்லாத ஒன்று
5. ஏட்டுச் சுரைக்காய் - பட்டறிவில்லாத படிப்பறிவு
6. அவலைநினைத்து உரலை இடித்தல் - எண்ணமும் செயலும் ஒத்துவராமை
7. கம்பி நீட்டல் - தலைமறைவாதல் **(ஏமாற்றுதல்)**
8. கானல் நீர் - பொய்யான தோற்றம்
9. அவசரக் குடுக்கை - எண்ணித் துணியாதார்
10. பஞ்சாய்ப்பறத்தல் - அலைந்து திரிதல்
11. குட்டிச்சுவர் - பயனற்று இருத்தல்
12. கொட்டியளத்தல் - மிகுதியாகப் பேசுதல்
13. சீட்டுக்கிழிந்தது - வேலை போய்விட்டது
14. கயிறு திரித்தல் - பொய்யானவற்றைக் கூறுதல்
15. ஓலை வந்தது - அழைப்பு வந்தது
16. கம்பி எண்ணுகிறான் - சிறையில் இருக்கிறான்
17. ஆயிரங்காலத்துப் பயிர் - நீண்ட காலத்திற்கு உரியது
18. வாழையடி வாழையாக - தலைமுறை தலைமுறையாக
19. வாயும் வயிறுமாக இருக்கிறாள். - கருவுற்று இருக்கிறாள்.
20. மூக்கும் முழியுமாக இருக்கிறாள் - அழகாக இருக்கிறாள்.
21. கூட இருந்தே குழி பறித்தல் - உடனிருந்தே கெடுத்தல்
22. தலைக்குனிவு - இழிவு
23. முகம் புதைத்தாள் - நாணமுற்றாள்
24. இரட்டை நாக்கு - உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுதல்
25. கண்துடைப்பு - ஏமாற்றுதல்

### இயல் -5 (பாடநூல் -பக்123)

1. **பின்வரும் மரபுத்தொடர்களை தொடரில் அமைத்து எழுது :**

1. **சீட்டுக் கிழிந்துவிட்டது** : பணியில் கவனமின்றி இருந்ததால் அவனது **சீட்டுக் கிழிந்துவிட்டது.**
2. **முதலைக்கண்ணீர்** : காவலரிடம் பிடிபட்ட திருடன் தனக்கு எதுவும் தெரியாது என்று முதலைக்கண்ணீர் வடித்தான்.
3. **கயிறு திரித்தல்** : கண்ணன் வெளிநாட்டில் பொறியாளராகப் பணியாற்றியதாக **கயிறு திரிக்கிறான்.**
4. **ஆயிரங்காலத்துப்பயிர்** : திருமணம் என்பது **ஆயிரங்காலத்துப்பயிர்** ஆகும்.
5. **கம்பி நீட்டல்** : அதிக வட்டி தருவதாகக் கூறிய நிதிநிறுவனம் **கம்பி நீட்டியது.**
6. **கானல் நீர்** : கடைசி நேரத்தில் படித்துத் தேர்வில் வெற்றி பெறலாம் என்பது **கானல் நீர்** போன்றது.
7. **ஆகாயத்தாமரை** : பெண்களுக்கு எதிரான தீமைகளை ஒழிக்காமல் **பெண்ணுரிமை பற்றிப் பேசுவது ஆகாயத்தாமரை** பறிப்பது போன்றதாகும்.
8. **கண்துடைப்பு** : **தொழிற்சாலைகளில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கை என்பது வெறும் கண்துடைப்பு வேலையாக ஆகிவிட்டது.**
9. **எடுப்பார் கைப்பிள்ளை** : **எடுப்பார் கைப்பிள்ளையாக** வாழ்பவர்கள் வாழ்வில் வெற்றி அடையமுடியாது.
10. **அவலை நினைத்து உரலை இடித்தல்** : தனக்குத் தொழில் தெரியாமல், அடுத்தவர் செய்யும் தொழிலைத் தானும் செய்து முன்னேறலாம் **என்பது அவலை நினைத்து உரலை இடிப்பது** போன்றதாகும்.

**இயல் 3** (பாடநூல் : பக்கம் - 83)

**1. இளமைப் பெயர்களைப் பொருத்துக :**

| | | | **விடை** | | |
|---|---|---|---|---|---|
| 1. ஆடு | - | கன்று | **1. ஆடு** | - | **குட்டி** |
| 2. மான் | - | பிள்ளை | **2. மான்** | - | **கன்று** |
| 3. கீரி | - | குட்டி | **3. கீரி** | - | **பிள்ளை** |
| 4. சிங்கம் | - | குஞ்சு | **4. சிங்கம்** | - | **குருளை** |
| 5. கோழி | - | குருளை | **5. கோழி** | - | **குஞ்சு** |

**இயல் 5** (பாடநூல்- பக்கம் :123)

**2. மரபுத்தொடருக்கேற்ற பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத்தொழில் செய்து வருகின்றனர்.
   அ) வாழை பயிரிடுதல் ஆ) பரம்பரை பரம்பரையாக இ) பயிர்த்தொழில்
   **விடை : பரம்பரை பரம்பரையாக**
2. எம். ஜி. இராமச்சந்திரன் திரைவானில் கொடிகட்டிப் பறந்தார்
   அ) தனிப்புகழோடு விளங்குதல் ஆ) கொடிகட்டுதல் இ) கனவு காணுதல்
   **விடை : தனிப்புகழோடு விளங்குதல்**

**இயல் 9** (பாடநூல்- பக்கம் : 224)

**2. உரிய மரபுச்சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. | எங்கள் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் ...................... (கட்டப்பட்டது / **எழுப்பப்பட்டது**) | 1. **எழுப்பப்பட்டது** |
| 2. | பாரதியார் செய்யுளை ...................... (பாடினார் / **இயற்றினார்**) | 2. **இயற்றினார்** |
| 3. | வேடன் ................(**எய்த** / செலுத்திய) அம்பு யானையை வீழ்த்தியது. | 3. **எய்த** |
| 4. | மாறன் ஓவியத்தை .................. (வரைந்தான் / **புனைந்தான்**) | 4. **புனைந்தான** |
| 5. | அந்தச் சிற்பம் ஒரே கல்லில் .......................(**வடிக்கப்பட்டது** / செதுக்கப்பட்டது) | 5. **வடிக்கப்பட்டது** |

பிரிவு- I **உவமைத் தொடர்கள்** பகுதி - 3

**உவமைகளைச் சொற்றொடரில் அமைத்து எழுது**

1. **உள்ளங்கை நெல்லிக்கனி போல**
   ஆசிரியர் நடத்திய இலக்கணம் **உள்ளங்கை நெல்லிக்கனி போலத்** தெளிவாக விளங்கிற்று.
2. **கிணற்றுத் தவளை போல**
   வெளிஉலகப்பற்றி அறியாதவர் **கிணற்றுத் தவளை போல** வாழ்கின்றனர்.
3. **மடைதிறந்த வெள்ளம் போல**
   அறிஞா அண்ணா **மடைதிறந்த வெள்ளம் போல** அடுக்குமொழியில் பேசுவார்.
4. **கீரியும் பாம்பும் போல**
   சொத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் அண்ணனும் தம்பியும் **கீரியும் பாம்பும் போல** சண்டையிட்டுக் கொண்டனர்.
5. **அனலிடைப்பட்ட புழுவைப் போல**
   கோவலனை இழந்த கண்ணகி **அனலிடைப்பட்ட புழுவைப் போலத்** துடித்தாள்.
6. **நிலவும் வானும் போல**
   முதுமைக் காலத்திலும் கணவனும் மனைவியும் **நிலவும் வானும் போல** இணைந்து வாழ்ந்தனர்.
7. **கல்மேல் எழுத்துப் போல**
   வள்ளுவரின் புகழ் **கல்மேல் எழுத்துப் போல** வையம் உள்ளவரை நிலைக்கும்.
8. **கடலில் கரைத்த பெருங்காயம் போல**
   மக்கள் தொகைப் பெருக்கத்தால் அரசுத்திட்டங்கள் **கடலில் கரைத்த பெருங்காயம் போல** பயனற்றுப் போகின்றன.
9. **இலவு காத்த கிளி போல :**
   தங்கள் ஊருக்குப் புதிய சாலைகள் போடப்படும் என எதிர்பார்த்த மக்களின் எதிர்பார்ப்பு **இலவு காத்த கிளி போல ஆயிற்று.**
10. **காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல :**
    தமிழில் பிற மொழி கலந்து பேசுவது **காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல** துன்பத்தைத் தருகின்றது
11. **அத்தி பூத்தாற் போல :**
    **அத்தி பூத்தாற் போல** அவ்வப்போது சில நல்ல தலைவர்கள் தோன்றுகிறார்கள்.
12. **மழை காணாப் பயிர் போல :**
    வெளியூரில் பணியாற்றும் தந்தையைக் காணாத குழந்தைகள் **மழை காணாப் பயிர் போல** வாடினார்கள்.
13. **மலரும் மணமும் போல :**
    மணமக்கள் **மலரும் மணமும் போல** ஒன்றுபட்டு வாழ வேண்டுமென வாழ்த்தினார்கள்.
14. **வேலியே பயிரை மேய்ந்தது போல :**
    காவலரே திருடுவது **வேலியே பயிரை மேய்ந்தது போல** உள்ளது.
15. **பசுமரத்தாணி போல :**
    இளமைக்காலத்தில் கற்கும் கல்வி **பசுமரத்தாணி போல** நெஞ்சில் ஆழமாகப் பதியும்.
16. **அடியற்ற மரம் போல :**
    தந்தையை இழந்த குடும்பம் **அடியற்ற மரம் போல** ஆனது.

## பிரிவு- I பழமொழிகளைத் தொடரில் அமைத்தல் பகுதி - 3

**இயல் - 7** (பாடநூல் -பக்கம் - 170)

**கீழ்க்காணும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. **அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.**

   **அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கேற்ப,** தந்தையை இழந்த முருகனின் முகம் கவலையில் வாடியிருந்தது.

2. **விளையும் பயிர் முளையிலே தெரியும்.**

   **விளையும் பயிர் முளையிலே தெரியும்** என்பதற்கேற்ப வள்ளலார் ஒன்பது வயதிலே புராணச் சொற்பொழிவில் மக்களை ஈர்த்தார்

3. **சுடர் விளக்காயினும் தூண்டு கோல் வேண்டும்.**

   அம்பேத்கர் உயர்கல்வி கற்பதற்காகப் பரோடா மன்னர் செய்த உதவி **சுடர் விளக்காயினும் தூண்டு கோல் வேண்டும்** என்பதை மெய்ப்பித்தது.

4. **சிறு துரும்பும் பல் குத்த உதவும்.**

   **சிறு துரும்பும் பல் குத்த உதவும்** என்பதற்கேற்ப நாம் சேமித்த சிறு தொகை கூட அவசரகாலத்தில் நமக்கு உதவும்.

5. **அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.**

   **அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு** என்னும் பழமொழிக்கு ஏற்ப அளவுக்கு அதிகமான பாராட்டு எதிர்மறை விளைவினைத் தரும்.

6. **புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.**

   **புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது** என்பதற்கொப்ப சான்றோர்கள் வறுமையிலும் செம்மை நிலை தவறமாட்டார்.

7. **உப்பிட்டவரை உள்ளளவும் நினை**

   **உப்பிட்டவரை உள்ளளவும் நினை** என்பதற்கேற்ப நம் தேவையில் உதவியவரை உயிர் உள்ளளவும் நன்றியுடன் நினைக்க வேண்டும்.

8. **நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் : நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்** என்னும் பழமொழிக்கு எற்ப சுகாதாரத்தை முதலில் பேணிப் பாதுகாக்க வேண்டும்.